ஹாக்ஸ்பரி-நேபியன் (HAWKESBURY-NEPEAN)
மெய்த்தகவல் அறிக்கை (FACT SHEET)

# உங்களது ‘எடுத்துச் செல்லத் தயாராக இருக்கும் ஆயத்தப் பெட்டி’ (Get Ready to Go kit)

வெளியேற்ற சமயங்களுக்கென ‘ஆயத்தப் பெட்டி’ (KIT) ஒன்றைத் தயாரிப்பது எப்படி

ஹாக்ஸ்பரி-நேபியன் பள்ளத்தாக்கில் (Hawkesbury-Nepean Valley) வெள்ளப்பெருக்குகளின் ஆழம் மற்றும் ஆபத்து காரணமாக, வெளியேறுவதற்கான அவசர எச்சரிக்கை பிறப்பிக்கப்படும்போது, தயாராகி வெளியேற உங்களுக்கு அதிக நேரம் இல்லாமல் போகலாம்.

## உங்களுக்கு ஏன் ஓர் ஆயத்தப் பெட்டி (kit) தேவைப்படுகிறது

- ஹாக்ஸ்பரி-நேபியன் பள்ளத்தாக்கில் (Hawkesbury-Nepean Valley) ஒரு குறிப்பிடத்தக்க வெள்ளப்பெருக்கு மக்களின் வீடுகளுக்குச் சேதத்தை ஏற்படுத்தும். இது தண்ணீர், மின்சாரம், எரிவாயு, சாலைகள் மற்றும் ரயில் பாதைகள் போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும்.
- வெள்ளம் உங்கள் உடைமையைப் பாதிக்கக்கூடும் என்பதை நீங்கள் அறிகின்ற அந்த நேரத்தில், நீங்கள் வெளியேறுவதற்கு மிகக் குறைந்த நேரமே இருக்கலாம். வெள்ளப்பெருக்குகளுக்கு (அல்லது வேறு ஏதேனும் இயற்கை அபாயத்துக்கு) தயாராக இருப்பதற்கு ஒரு முக்கிய படிநிலையாக, ‘எடுத்துச் செல்லத் தயாராக இருக்கும் ஆயத்தப் பெட்டி’ (Get ‘Ready to Go kit) ஒன்றைத் தயார் செய்ய வேண்டும்.
- நீங்கள் உங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களின் இடங்களுக்குச் சென்றாலோ அல்லது வெளியேற்று மையத்திற்குச் (evacuation centre) சென்றாலோ, வெளியேறும்போதும் மற்றும் உடனடியாக அதற்குப் பிறகும், உங்களுக்குத் தேவையானவை எவையோ, அவை ஆயத்தப் பெட்டியில் இருக்க வேண்டும்.

## இப்போது என்ன செய்வது

- முக்கியப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை (காப்பீட்டுப் பத்திரம் (insurance), அடையாள அட்டை, கடவுச்சீட்டுகள் (passports) போன்றவை) அலகீடு செய்துகொள்ளவும் (scan), அல்லது புகைப்படம் எடுத்துக்கொள்ளவும் (photograph) அல்லது ‘கிளவுட்’ (cloud) -இல் பதிவேற்றம் செய்துகொள்ளவும்.
- முக்கியத் தொடர்புகள் பற்றிய தகவலை உங்கள் கைப்பேசியில் வைத்துக் கொள்ளவும் (எ.கா. மருத்துவரின் எண், மின்சாரம் மற்றும் குடிநீர் பயன்பாடுகள் போன்றவை)
- மருந்துச் சீட்டுகளைப் புகைப்படம் எடுத்துக் கொள்ளவும் அல்லது அலகீடு செய்து கொள்ளவும்
- உங்கள் வீடு மற்றும் வீட்டுப் பொருட்களுக்கான காப்பீட்டுக் கொள்கையைச் (home and contents insurance policy) சரிபார்த்துக் கொள்ளவும்

## உங்கள் ஆயத்தப் பெட்டியில் (kit) முதலில் நீங்கள் என்ன வைக்கலாம்

- கூடுதலான மின்கலங்களுடன் (batteries) கையில் எடுத்துச் செல்லக்கூடிய வானொலிப் பெட்டி
- கூடுதலான மின்கலங்களுடன் (batteries) மின்விளக்கு (torch)
- முதலுதவிப் பெட்டி (உங்கள் வீட்டிற்குத் தேவையான பொருட்களுடன்)
- மெழுகுவர்த்திகள் மற்றும் நீர் புகாத தீப்பெட்டிகள்
- தனிப்பட்டோருக்கான சுகாதாரப் பொருட்கள்
- முக்கிய ஆவணங்கள் (எ.கா. கடவுச்சீட்டுகள் அல்லது காப்பீட்டுப் பத்திரம்) மற்றும் மதிப்புமிக்க பொருட்கள் (புகைப்படங்கள், நகைகள் போன்றவை) போன்ற மதிப்புமிக்க பொருட்கள் வைப்பதற்கான நீர் புகாத பை

## நீங்கள் வெளியேறும் போது, உங்களது ‘எடுத்துச் செல்லத் தயாராக இருக்கும் ஆயத்தப் பெட்டியில்’ (Get Ready to Go kit) எவையெல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டும்

- சில பொம்மைகள் அல்லது குடும்பத்தினருக்கான விளையாட்டுப் பொருட்கள்
- போதிய அளவு தேவையான மருந்துப் பொருட்கள்
- குழந்தைகள், ஊனமுற்றோர், பலவீனமானவர்கள் மற்றும்/அல்லது வயதானவர்களுக்கு ஏதேனும் சிறப்புத் தேவைகள் மற்றும் பொருட்கள்
- புதிதான உணவு மற்றும் குடிநீர்
- அனைத்து வீட்டு உறுப்பினர்களுக்கும் மாற்றி மாற்றிப் அணிந்துகொள்வதற்குப் பொருத்தமான ஆடைகள் மற்றும் பாதணிகள்
- கைப்பேசி மற்றும் மின்னேற்றி (charger)



# செல்லப் பிராணிகள் மற்றும் விலங்குகளுக்கு ஒரு தனியான ஆயத்தப் பெட்டி தேவை:

சுய கட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து, உணவு, தண்ணீர், கழிப்பறை, மருந்துகள், முதலுதவி, வீட்டுவசதி மற்றும் படுக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளவும்:

- ஒவ்வொரு விலங்குக்கும் கூண்டுகள் (cages) அல்லது செல்லப் பிராணிகளைச் சுமந்து செல்லும் சாதனங்கள் (pet carriers); அல்லது
- ஒவ்வொரு விலங்குக்கும் வாய்க்கூண்டு (muzzle) மற்றும் தோல் நாடா (leash); அல்லது இழுப்புக் கயிறு மற்றும் கழுத்துப் பட்டை
- ஒவ்வொரு விலங்குக்கும் 3–7 நாட்களுக்கான உணவு மற்றும் தண்ணீர், முதலுதவிப் பொருட்கள்
- கிண்ணம் அல்லது தீவன வாளி; குவளை திறக்கும் கருவி (can opener) மற்றும் கரண்டி
- கம்பளிப் போர்வை, துண்டுகள் அல்லது படுக்கை
- விலங்குகளுக்கான மருந்து வகைகள் மற்றும் முதலுதவிப் பொருட்கள்
- உங்கள் செல்லப்பிராணியின் தடுப்பூசி சான்றிதழைப் புகைப்படம் எடுத்துக் கொள்ளவும்
- பூனைகளுக்கான சருகுக்கூளம் (litter) மற்றும் சருகுக்கூளத் தட்டு (litter tray)
- நாய்களுக்கான கழிவுப்பை (poo bag)
- செல்லப் பிராணிகளுக்கான பொம்மைகள்

## உங்கள் ஆயத்தப் பெட்டியைப் பராமரித்தல் மற்றும் பத்திரப்படுத்துதல்

உங்கள் ஆயத்தப் பெட்டியானது, ஒரு நீர்புகாத சேமிப்புக் கொள்கலனில் வைக்கப்பட வேண்டும், அத்துடன் அணுகுவதற்கு எளிதான ஒரு பாதுகாப்பான இடத்தில் பத்திரப்படுத்தப்பட வேண்டும்.

முறைப்படி ஒழுங்காக, உங்களது ‘எடுத்துச் செல்லத் தயாராக இருக்கும் ஆயத்தப் பெட்டியை’ (Get Ready to Go kit) சோதித்துப் பார்க்கவும், (மின்கலன்கள் (batteries) மற்றும் மருந்துகளின் பயன்பாட்டுத் தேதிகளைச் சரிபார்க்க வேண்டுமென்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும்) மேலும் தேவைப்பட்டால் பொருட்களை மீண்டும் நிரப்பிக் கொள்ளவும்.

அத்துடன், உங்கள் தொலைபேசியின் அருகில் அல்லது உங்கள் குளிர்சாதனப் பெட்டியின் மேலே அவசரகாலத் தொலைபேசி எண்களின் பட்டியல் ஒன்றை வைத்திருக்கவும்.

SES
NSW STATE EMERGENCY SERVICE

www.ses.nsw.gov.au/flood-awareness-nsw/sydney-rivers/hawkesbury-nepean-valley/ என்ற இணையதளத்தில் மேலும் அறிந்து கொள்ளவும் அல்லது அருகிலுள்ள குறியீட்டை அலகீடு (scanning) செய்யவும்